பக்கங்கள் 14+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 24 செவ்வாய்க்கிழமை 07.05.2024 அதிர்வு 279

வித்தியா கொலைத் தீர்ப்புக்கு எதிரான

## மேன்முறையீடு வழக்கிலிருந்து விலகிய நீதியரசர் துரைராஜா

யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சுவிஸ்குமார் உட்பட ஐந்து பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை 04▶

தொழிலாளர்களின் சம்பளத்தைக் காரணம் காட்டி

## தோட்டங்களைக் கையளித்து விட்டு கம்பனிகளைப் போகச் சொல்லாதீர்



### மனோ கணேசன் எம்.பி. இடித்துரைப்பு

“தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் காரணம் காட்டி, தோட்டங்களை அரசிடம் கையளித்து விட்டுக் கம்பனிகளைப் போகச் சொல்ல வேண்டாம். எத்தனை பின்னடைவுகள், பிரச்சினைகள் இருந்தாலும், தனியார் கம்பனிகளிடம் இருந்தால்தான் தோட்டக் காணிகள் பாதுகாக்கப்படும் என்பது எனது உறுதியான நிலைப்பாடு.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 04▶

## “என் அம்மாவின் கழுத்தை நெரித்து அவரை நானே கொலை செய்தேன்”

### தெல்லிப்பழையில் கைதான 16 வயது மகன் வாக்குமூலம்



“எனது அம்மாவின் கழுத்தை நெரித்து அவரை நானே படுகொலை செய்தேன்” - என்று கைதான 16 வயது மகன் விசாரணைகளின்போது வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று யாழ். தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றில் இருந்து சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த ஹெனடிக் ஜஸ்மின் (வயது 37) எனும் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டார். 03▶

## யாழில் அதீத வெப்பத்தால் ஐவர் உயிரிழப்பு

### போதான வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பம் மற்றும் வெப்ப அலை காரணமாக 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று யாழ். போதான வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “யாழ்ப்பாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை 03▶

## தென்மராட்சி வாகன விபத்தில் ஒருவர் மரணம்! நால்வர் காயங்களுடன் வைத்தியசாலையில்!!

யாழ். தென்மராட்சி பகுதியில் லாண்ட் மாஸ்ரர் – ஹயஸ் ரக வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 04▶







# காதலியைப் பார்க்கச் சென்றவேளை மாயமான இளைஞர் சடலமாக மீட்பு!

குளியாப்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் காதலியைப் பார்ப்பதற்காகச் சென்று காணாமல்போன இளைஞர் இன்று மாதம்பே, பனிரெண்டாவ பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காடொன்றில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி குளியாப்பிட்டி, இலுக்ஹேன பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்படி, தகவல் கிடைக்கப்பெற்ற பகுதிகளுக்கமைய பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்திருந்ததுடன், குறித்த சம்பவத்தின் பின்னர் சந்தேகநபர் ஒருவர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றிருந்தமையால் அதற்கமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி சந்தேகநபர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றிருந்த நிலையில், அவரது தாய் மற்றும் தந்தையைப் பொலிஸார் கைது செய்தனர்.

வெலிமடை மற்றும் கப்பெட்டிபொல பிரதேசத்தில் வசிக்கும் இருவர் குற்றச் செயல்களுக்கு உதவிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில் மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனவும் அவர் கூறினார்.

இதற்கமைய, காணாமல்போன இளைஞர் படுகொலை செய்யப்பட்டார் எனத் தெரியவந்தபோதும், அது எவ்வாறு இடம்பெற்றது உணவு, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, குறித்த இளைஞரைக் கடத்திய சம்பவம் தொடர்பில் தலைமறைவாகியிருந்த பிரதான சந்தேகநபர் நேற்று குளியாப்பிட்டி நீதிமன்றில் ஆஜராகினார் எனவும், கொலை செய்த நபர் தொடர்பில் எவ்வித தகவலும் வெளியாகவில்லை எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

# அம்பாறை கரையோரத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பரவலாக டெங்கு நோய் பரவக் கூடிய ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளது.

அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்கள் சுகாதார பிரிவினருக்கும், பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்



டாக்டர் சகீலா இஸ்ஸதீன் இன்று (07) தெரிவித்துள்ளார்.

தற்போது இடைவிட்ட மழை பெய்வதாலும் உஷ்ணமான காலநிலை நிலவுவதனாலும் இது டெங்கு நுளம்பு பெருகுவதற்கு சாதகமான சூழலை தோற்றுவிக்கக்கூடும்.

இதனால் பிரதேச மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புற சூழல், பாடசாலைகள், நீர் தேங்கி நிற்கும் பொருள்கள், நீர் தேங்கும் இடங்கள், கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி, படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டும். பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதேவேளை, மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்துக்குக் கழிவு நீர் தேங்கியுள்ளது. இது குறித்து கல்முனை மாநகரசபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுதல் ஆரம்பம்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்படும் நிலைபேறான வீட்டுத் தோட்ட வேலை திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுதல் ஆரம்ப நிகழ்வானது கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கௌரவ காதர் மஸ்தானின் பங்கேற்போடு வவுனியா பம்பைமடு கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது பயனாளிகளுக்கான வீட்டுத் தோட்ட விதைகள் மற்றும் மரக்கன்றுகளை இராஜாங்க அமைச்சர் வழங்கி வைத்தார்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழில் அதீத...**

காணப்படுகின்றது. ஒரு மனிதனின் உடலானது 40.5 செண்டிகிரேட் அல்லது 105 பரனைட் வெப்பத்தையே தாங்கும். அதனைத் தாண்டும்போது, தீவிரமான பாதிப்புகள் ஏற்படும்.

அதனால் வியர்வை அதிகரிப்பு, வியர்குருக்கள் போடுதல் போன்றவை ஏற்படும். வியர்வை அதிகரிப்பால் உடலில் நீரின் அளவு குறைவடைந்து மயக்கம் ஏற்படும்.

இந்நிலை தொடர்கின்றபோது “ஹீட் ஸ்ரோக்” ஏற்படும். அத்துடன் சிறுநீரகம், இருதயம், சுவாசப்பை போன்றவை செயல் இழக்கும். அதேவேளை, குருதி சிறுதட்டுக்களின் எண்ணிக்கை குறைவடைந்து உடல் நிலை மிக மோசமாகப் பாதிக்கப்படும். மூளை செயல் இழந்து மயக்கம் ஏற்படும் சம்பவங்களும் நிகழும்.

யாழ். போதனாவில் சிகிச்சை பெற்று வந்த சுமார் 5 பேர் “ஹீட் ஸ்ரோக்” காரணமாக உயிரிழந்துள்ளனர். அவர்களின் உயிரிழப்புக்கு அவர்களுக்கு ஏற்கனவே இருந்த நோய் நிலைமைகள் காரணமாக இருந்தாலும் அதிகரித்த வெப்பநிலையே நோயைத் தீவிரப்படுத்தி அவர்களின் உயிரிழப்புக்குக் காரணமாகும்.

எனவே, வெப்பத்தின் பேராபத்தான நிலையில் இருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

“ஹீட் ஸ்ரோக்” வரமால் தடுக்க குளிர்மையான பானங்களை அருந்த வேண்டும். வீட்டில் உள்ள வயோதிபர்களுக்கு போதிய நீராகாரங்களை வழங்க வேண்டும். வயதானவர்களுக்குத் தண்ணீர் தாகம் எடுப்பது தெரியாது. எனவே, அவர்களுக்குத் தொடர்ச்சியாக நீராகாரங்களை வழங்க வேண்டும்.

குறிப்பாக தர்ப்பூசணி, வெள்ளரிப் பழம் , தோடம்பழம் போன்ற பழங்களை உண்ண வேண்டும். குளிர்ந்த நீரினால் முகத்தைக் கழுவ வேண்டும். கண் புருவங்களை அடிக்கடி நீரினால் கழுவிக்கொள்ள வேண்டும். அதன் ஊடாக உடலின் வெப்பநிலையைத் தணிக்க முடியும்.

உடலின் வெப்பநிலையை குறைப்பதன் ஊடாகவே “ஹீட் ஸ்ரோக்” வராமல் தடுக்க முடியும்.” – என்றார்.

**என் அம்மாவின்...**

அவர் தனது இரு பிள்ளைகளுடன் வசித்து வந்த நிலையில் அவரது கணவன் வெளிநாட்டில் வசித்து வருகின்றார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் தாயும் மகனும் மட்டுமே இருந்தனர்.

மறுநாள் தாய் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார். பெண்ணின் மகனான 16 வயதுடைய சிறுவன் வீட்டில் இருந்து காணாமல்போயிருந்ததுடன் வீட்டின் சுவர்களில் இரத்தக்கறைகளும் காணப்பட்டன.

அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த வேளை காணாமல்போன 16 வயது சிறுவனைப் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சிறுவனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், தானே தாயின் கழுத்தை நெரித்துப் படுகொலை செய்தேன் என வாக்குமூலம் அளித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை , மேற்படி சிறுவன் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று அயலவர்கள் தெரிவித்தனர். சிறுவன் கைபேசி விளையாட்டுக்களுக்கு (மொபைல் கேம்ஸ்) அடிமையானவர் எனவும், அதனால் சிறுவன் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்தார் எனவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் பேச்சாளர் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தோட்டங்களை...**

மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமே தின மேடையில் அறிவித்த சம்பளத் தொகையை அவரால்

பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்றால், அதற்கான மாற்று நடவடிக்கையை அரச தலைவராக அவர் எடுக்க வேண்டும். வர்த்தமானி பிரகடனம் செய்த தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசில் உள்ள இ.தொ.கா. உணர்ச்சி வசப்பட்டு மேடையில் பொங்குவது, பட்டாசு வெடித்து பொங்கல் சோறு பொங்குவது ஆகிய சிறு விளையாட்டுகளை நிறுத்தி விட்டு நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். இது தொடர்பில் எமது ஒத்துழைப்பையும் கேட்டால் நாம் சாதகமாகப் பரிசீலிப்போம். ஆனால், மாற்று நடவடிக்கை என்று "தோட்டங்களை அரசிடம் கையளித்து விட்டு கம்பனிகள் போக வேண்டும்" என்ற கோஷத்தை முன்வைக்க வேண்டாம் என அரசில் உள்ள மலையக நண்பர்களுக்கு அன்புடன் சொல்கின்றேன். கம்பனி போய், காணிகளை அரசு பொறுப்பு ஏற்றால் அவை அவர்களது ஆதரவாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு விடும். இப்படித்தான் இன்று அரசிடம் உள்ள ஜனவசம், எல்கடுவ ஆகிய அரச கம்பனி காணிகள் கேட்பாரின்றி வழங்கப்பட்டு, அங்கே வாழ்ந்த நமது மக்கள் நடுத்தெருவில் இருக்கின்றார்கள்.

அப்படி நடந்தால் அது சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதை ஆகி விடும். தனியாரிடம் தோட்டங்கள் இருப்பதால்தான் காணிகள் கொஞ்சமாவது பாதுகாப்பாக இருக்கின்றன. ஆகவே, சித்திரம் வரைய முடியவில்லை என்பதற்காகச் சுவரை இடிக்க யோசனை கூற வேண்டாம். சம்பளக் கோரிக்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்க்கிறேன் என்று காணி உரிமையை அடியோடு அழித்து விட வேண்டாம்.

பெருந்தோட்டங்களில் வாழும் நமது மக்களின் பிரச்சினை தீர பெருந்தோட்ட துறையில் "சிஸ்டம் சேன்ச்" என்ற மீள் கட்டமைப்பைச் செய்ய வேண்டும். அது தான் நாம் எப்போதும் சொல்லும் நிரந்தரத் தீர்வு. நாம் ஆட்சிக்கு வந்து காணி உரிமையை அடிப்படையாகக் கொண்டு, நமது மக்களை சிறு தோட்ட தொழில் முனைவோராக மாற்றுவோம். அதுவரை தோட்டக் காணிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை எழுதும் கலந்துரையாடலின்போது, தோட்டத் தொழிலாளரின் சம்பளத் தொகையாக அன்று ரூ. 1,000 இற்கு மாற்றாக ரூ. 1,500 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. "சம்பளத்தைப் பற்றி பேசுவோம். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ இதை விட பெரிய தொகையைக் கூறுவார். அது பற்றி எல்லோரும் பேசுவார்கள். ஆகவே, சம்பளத்தை விட, தோட்டத் துறையில் "சிஸ்டம் சேன்ச் பற்றி நாம் பேசுவோம்" என நான் கூறினேன். "இன்று தோட்டக் கம்பனிகளை விட குறைந்த அளவு நிலப்பரப்பைக் கொண்டுள்ள சிறு தோட்ட உடமையாளர்கள் தான், தேயிலை ஏற்றுமதி வருவாயில் அதிக வருமானத்தைப் பெற்றுத் தருகின்றார்கள்" என்ற புள்ளிவிபரத்தை நான் அங்கே எடுத்து வைத்தேன். அதன் பிறகு, தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட உடைமையாளர்களாக மாற்றுவோம் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட நாம் முடிவு செய்தோம். சஜித் பிரேமதாஸவும் உடன்பட்டார்.

சஜித் பிரேமதாஸவின் 2019 தேர்தல் விஞ்ஞானத்தில், தோட்டத் தொழிலாளிகளை, "மலையகத் தமிழ் விவசாயிகள்" எனப் பெயரிட்டு, "இந்த மக்கள் விவசாயிகளாக, நிலையான வருமானம் பெற்றுக்கொள்வதற்காக, தனியார், அரச பெருந்தோட்டங்கள் மீள் கட்டமைப்பு செய்யப்படும். இந்த மலையக விவசாயிகளிடமிருந்து விளை பொருட்களை விலைக்கு வாங்கி, தோட்ட நிறுவனங்களும், இந்த மலையக விவசாயிகளும் பங்காளர்களாகின்ற, தொழில் முறைமை உத்தரவாதம் செய்யப்படும்" என்று குறிப்பிடப்பட்டது.

சஜித் பிரேமதாஸவின் 2019 தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்றும் தேடி எடுத்துப் பார்த்தால் இந்த வாசகங்களை அங்கே காணலாம். இதன் தொடர்ச்சியாகவே சஜித் பிரேமதாஸ "தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட உடைமையாளர்களாக மாற்றுவோம்" என்ற முற்போக்கான கருத்தை இன்று மீண்டும், மீண்டும் கூறி வருகின்றார். நாம் அவரை நம்புகின்றோம்.

ஆகவே, எங்கள் அரசு வரும் வரை இந்தத் தோட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் காரணம் காட்டி, தோட்டங்களை அரசிடம் கையளித்து விட்டுக் கம்பனிகளைப் போகச் சொல்ல வேண்டாம். எத்தனை பின்னடைவுகள், பிரச்சினைகள் இருந்தாலும், தனியார் கம்பனிகளிடம் இருந்தால்தான் தோட்டக் காணிகள் பாதுகாக்கப்படும் என்பது எனது உறுதியான நிலைப்பாடு." – என்றார்.

---

**மேன்முறையீடு...**

விசாரிக்க பிரேத நீதியரசர் நியமித்த ஐவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வின் தலைவரான நீதியரசர் எஸ்.துரைராஜா விசாரணையில் இருந்து விலகியுள்ளார்.

இந்த மேன்முறையீடுகள் நீதியரசர்களான எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய ஐந்து பேர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதியரசர் எஸ்.துரைராஜா, தான் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றிய காலத்தில் இந்த வழக்கின் விவகாரங்களை மேற்பார்வையிட்டதால் இந்த மேன்முறையீட்டு விசாரணையில் இருந்து விலகத் தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணை ஜுலை 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான மொழி பெயர்ப்புகள் உரிய முறையில் கிடைக்கப் பெறாத காரணத்தால் இந்த வழக்கின் விசாரணை சுமார் 6 வருடங்களாகத் தாமதமாகியுள்ளது என்று பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த நீதியரசர் எஸ். துரைராஜா, மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையால் இந்த நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன, இந்த வழக்கு தொடர்பான மொழிபெயர்ப்பு பணிகள் ஏறக்குறைய நிறைவடைந்துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

அதன்படி, மொழிபெயர்ப்புப் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய உரிய மேன்முறையீட்டு மனுக்களை ஜுலை 30 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி யாழ். புங்குடுதீவு பகுதியில் 18 வயது பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுவிஸ் குமார் உள்ளிட்டவர்களுக்கு 2017 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், தமக்குத் தண்டனை வழங்கிய விதம் சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து பிரதிவாதிகள் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இதன்படி, தண்டனைகளில் இருந்து தம்மை விடுவித்து உத்தரவு பிறப்பிக்குமாறு பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

**தென்மராட்சி...**

சாவகச்சேரியில் இருந்து நாவற்குழி நோக்கிச் சென்று கொண்டிருந்த லான்ட் மாஸ்ரரின் பின்புறமாகக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் லாண்ட் மாஸ்ரரில் பயணித்த கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ம.சதீஸ்குமார் என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும், விபத்தில் லாண்ட் மாஸ்ரர் சாரதி உட்பட லாண்ட் மாஸ்ரரில் பயணித்த மூவர் மற்றும் ஹயஸ் வாகனத்தில் பயணித்த பெண் ஒருவருமாக மொத்தம் நால்வர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# வர்த்தக நாமங்களுக்கு விருது அரச அனுசரணையுடன் ஏற்பாடு!

இலங்கையில் அரச அனுசரணையுடன் முதலாவது தேசிய வர்த்தக நாமங்கள் விருது வழங்கும் விழா இடம்பெறவுள்ளது.

கைத்தொழில் அமைச்சும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து அரச அனுசரணையுடன் இலங்கையில் முதன்முறையாக இந்த விழாவை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றன.

இலங்கையில் வர்த்தக நாமங்களுக்கு விருது வழங்கும் விழாக்கள் பல இடம்பெற்றுள்ள போதிலும், தொழில் துறைக்கான வர்த்தக நாம விருது வழங்கும் விழா நடைபெறாததால், இலங்கையின் உற்பத்தித் தொழில்கள் தொடர்பான வர்த்தக நாமங்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி தலைவருக்கு எடுத்துச் செல்வதற்கு தடையாக இருந்தது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது உற்பத்தித் துறையில் விசேட வர்த்தக நாம விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ளது என்று கலாநிதி சாரங்க அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இவ்வகையில், சுமார் 25 கைத்தொழில் துறைகள் மற்றும் 125 துணைத் துறைகளை உள்ளடக்கிய வகையில் இந்த வர்த்தக நாம சிறப்பு விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காகச் சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்துறையினருக்கு அறிவிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தொழில் வளர்ச்சி வாரியம் தெரிவித்துள்ளது.

தேசிய அளவில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த விருது வழங்கும் விழா நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வதிலிருந்து, அவற்றை சரியான முறையில் அனுப்புவதற்குத் தேவையான அனைத்து அறிவுறுத்தல்களையும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள துணை மற்றும் உதவி இயக்குநர்களிடமிருந்து பெறலாம்.

நிபுணர்கள் குழுவால் பரிந்துரைக்கப்படும் தொழில்துறையினரின் வர்த்தக முத்திரை தொடர்பான விண்ணப்பங்களைத் தெரிவு செய்து மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தேசிய அளவில் தெரிவு செய்த பின்னர் 120 விருதுகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில் முனைவோர் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் திருமதி ரேணுகா ஜயலத் கூறுகிறார்.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும இது தொடர்பில் தெரிவிக்கையில்,

தொழில் வகைகளை அடிப்படையாகக் கொண்டது. நமது ‘சிலோன் டீ பிராண்டின்’ மூலம் நமது நாட்டைப் பற்றி உலகம் முழுவதும் தெரியும்.

மேலும், நம் நாட்டின் தொழிலதிபர்கள் தங்கள் தயாரிப்பு வகைகளால் நாட்டில் உள்ள நுகர்வோர் மத்தியில் பிரபலமாக உள்ளனர்.

மேலும், அவர்களின் தயாரிப்புகளுக்கு நல்ல விற்பனையும் கிடைத்துள்ளது.





எனவே, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் வகைகள் தொழிலதிபரின் இருப்புக்கு மிகவும் முக்கியம்.

இதன் மூலம் முதன் முறையாக நமது தொழிலதிபரின் பொருள்களை ‘பிராண்டுகள்’ மூலம் சர்வதேச சந்தைக்கு கொண்டு செல்லும் வகையில் அரசின் ஆதரவுடன் தொழில் துறையின் தயாரிப்பு பிராண்டுகளுக்கு விருது வழங்கும் விழாவை நடத்துகிறோம்.

இதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன், தொழில் முனைவோர் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் இந்த பிராண்ட் விருது விழாவை நடத்துவோம் என்று நம்புகிறோம்.

பிராண்டுக்கு மதிப்பு அளிப்பதன் மூலம், எங்கள் உற்பத்தித் துறையை நிலையான முறையில் பராமரிப்பதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்துக்குத் தொழில்துறையின் பங்களிப்பை இரட்டிப்பாக்க எதிர்பார்க்கிறோம்.– என்றார்.

2024 மே மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் இந்த தேசிய சிறந்த வர்த்தக நாம விருது வழங்கும் விழாவுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் விண்ணப்பங்களை மொரட்டுவ கட்டுபெத்தவில் அமைந்துள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர்கள் மற்றும் பிரதிப் பணிப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். 25 மாவட்டங்களிலும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை அமைந்துள்ளது.

முதன்முறையாக நடைபெறும் வர்த்தக நாம விருது வழங்கும் விழாவுக்கு விண்ணப்பிக்கும் கைத்தொழில் துறையினருக்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்று இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை றறற.னைடி.பழஎ.டம இணையத்தளத்தில் பார்வையிடமுடியும் என்று இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடக ஆலோசகர் டி.எஸ். என். ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

**நமது கருத்து**

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இளம் சமூகத்தை மீட்க....!

இலங்கையில் போதைப்பொருள்கள் பாவனையாளர்கள், வர்த்தகர்கள், கடத்தல்காரர்கள் போன்றோருக்கு எதிராக ‘யுக்திய’ செயற்பாடு மூலம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், விவகாரம் வெட்ட வெட்டத் துளிர்க்கும் விடயமாக மாறியிருப்பதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

சமூகச் சீரழிவுக்கு வழிகோலும் இந்தப் பழக்கம் புற்றுநோய் போல நமது சமூகக் கட்டமைப்பைப் பற்றிப் பீடித்து பரவி வருவதுதான் சிக்கலுக்குக் காரணம்.

இலங்கையில் உள்ள இரண்டு கோடி இருபது லட்சம் மக்கள் தொகையில், சுமார் ஐம்பது லட்சம் பேர் பல்வேறு போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ளமையுடன் ஒவ்வொரு ஆண்டும் சுமார் நாற்பதாயிரம் பேர் போதைப்பொருள் பாவனையினால் உயிரிழக்கின்றனர் எனவும் தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்தப் புள்ளிவிவரங்கள் கொஞ்சம் மிகைப்படுத்தப்பட்டவை போன்று தோன்றினாலும், பீடி, சிகரெட், வெற்றிலை மற்றும் கள்ளு, மது போன்ற குடிவகைகளுக்கு ஆள்பட்டோரையும் சேர்த்துப் பார்த்தால் ஐந்தில் ஒரு பகுதியினர் ஏதோ ஒரு வகையில் இவ்விவகாரத்தில் சிக்கியிருக்கின்றமை புலனாகும்.

போதைப் பாவனை சிறுகச் சிறுக அடிமைப்படுத்தி மோசமான நிலைமைக்குக் கொண்டு செல்லும் கடை கெட்ட பழக்கம் என்பதை மறந்து விடக் கூடாது. சாதாரண பீடா வெற்றிலையில் தொடங்கும் பண்பு கடைசியில் மோசமான - மீள முடியாத - போதைப் பாவனையில் கொண்டு போய் விட்டு விடும்.

இலங்கையில் போதைப் பொருள் பாவனையாளர்களில் சுமார் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் பேர் கஞ்சா போதைப்பொருள் பாவனையை நாடியுள்ளனர் எனவும், ஒரு லட்சம் பேர் ஹெரோயின் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் எனவும் தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபையின் தலைவர் வழக்கறிஞர் சக்ய நாணயக்கார தெரிவித்திருந்தார்.

மேலும், நாட்டிலுள்ள மொத்த சனத்தொகையில் 15 லட்சம் பேர் புகையிலைப் பாவனையிலும், இருபத்தைந்தாயிரம் முதல் முப்பதாயிரம் பேர் வரை பல்வேறு போதைப்பொருள் பாவனையிலும் ஈடுபட்டுள்ளனர் எனவும் தேசிய ஆபத்தான மருந்துக் கட்டுப்பாட்டு சபை குறிப்பிட்டுள்ளது.

எத்தகைய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், தீவிர கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றையும் மீறி நாளுக்கு நாள் போதைப் பொருள் பாவனை அதிகரித்த வண்ணமே உள்ளது.

தினசரி நாட்டில் பதிவாகும் துஷ்பிரயோகங்கள், கொலை, கொள்ளை, களவு போன்ற குற்றச் சம்பவங்களில் பெரும்பாலானவற்றின் பின்னணியில் நிச்சயம் போதைப்பொருள் பாவனை சம்பந்தப்பட்டிருக்கும் என்பதும் கண்கூடு.

இந்நிலையில், போதைப்பொருள் மாபியாவில் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படும் பொரல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் குழுவினர் வேலையின்மையால் ஏற்பட்ட விரக்தி நிலையே போதைப்பொருளுக்குத் தாங்கள் அடிமையாக முதற் காரணம் எனத் தெரிவித்துள்ளனர் என்று பொரல்லை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனக விதானகே உறுதிப்படுத்தியுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆம். அது உண்மைதான். நாட்டில் வேலையற்ற இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு போதைப்பொருள் மாபியாவில் சிக்கிக் கொண்ட இளம் சமுதாயத்தில் அதிகமானோர் வேலை மற்றும் தொழில் வாய்ப்புகளற்ற இளைஞர்களே.

இளம் சமூகத்துக்கான வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையைத் தீர்க்காத வரையில் - அவர்களின் எதிர்காலத்துக்கான சுபீட்ச வழிகாட்டல் ஒன்றை கால தாமதமின்றி உறுதிப்படுத்தாத வரையில் - போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்ட ஒரு தொகுதியினரை பகீரதப் பிரயத்தனத்துடன் அதிலிருந்து மீட்டாலும், அந்த இடத்தை நிரப்பி, மீண்டும் போதைப் பாவனைக்குள் மூழ்க மேலும் மற்றுமொரு இளைஞர் குழுவொன்று தயாராக இருக்கும் நிலையே நீடிக்கும்.

ஆகவே, இளம் சமுதாயத்தை கல்வி, வேலை வாய்ப்பு, எதிர்கால முன்னேற்றம் போன்ற விடயங்களில் தேங்க - தவிக்க - அல்லாட - விரக்தியுற - விடாது முன்கொண்டு செல்லும் திட்டமும் போதைப் பொருள் பாவனை, கடத்தல், வர்த்தகம் ஆகியவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளுடன் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுவதும் அவசியமாகும்.



# காத்தான்குடியில் நடக்கும் இலவச கண்புரைச் சத்திர சிகிச்சை முகாம்!

**(பழுவூரான்)**

'சவூதியின் ஒளி' இலவச கண்புரை சத்திர சிகிச்சை முகாம் நேற்று திங்கட்கிழமை (06) காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பமானது.

சவூதி அரேபிய மன்னர் சல்மானின் 'நிவாரணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கான மன்னர் மையம்' இதற்கான நிதி அனுசரணையை வழங்குகின்றது.

அத்தோடு 'சவூதியின் ஒளி' பார்வைக் குறைபாடு மற்றும் அதற்கான காரணிகளுக்கு எதிராகப் போராடும் தன்னார்வ நிகழ்ச்சித் திட்டம் என்ற உலகளாவிய திட்டத்தின் கீழ் இலங்கையில் கண்புரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் இந்த சந்திர சிகிச்சை இடம் பெறுகிறது.

இலங்கையில் ஆபிஸ் நிறுவனம் அல் பஷர் சர்வதேச அமைப்புடன் இணைந்து 28 ஆவது தடவையாக இலவச கண்புரை சத்திர சிகிச்சை முகாமை இந்த முறையும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நடத்துகிறது.

இந்த சந்திர சிகிச்சை முகாம் நேற்று திங்கட்கிழமை (06) ஆரம்பமாகியது. எதிர்வரும் 17 ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது. இதில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த கண் வைத்தியர்கள் சத்திர சிகிச்சையை மேற் கொள்கின்றனர்.

இந்தத் திட்டத்துக்காக நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசோதனை முகாம்கள் மூலம் இன, மத வேறுபாடு இன்றித் தெரிவு செய்யப்பட்ட, வசதி குறைந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சத்திர சிகிச்சை முகாம் தொடர்பான கலந்துரையாடல் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.ஜாபீர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் கண்புரை சத்திர சிகிச்சையை மேற் கொள்ளும் பாகிஸ்தான் கண் வைத்தியர்கள் மற்றும் காத்தான்குடி ஆதார வைத்திய சாலை நிர்வாக உத்தியோகத்தர் நியாஸ், ஆமிஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் உட்பட வைத்திய சாலை ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.






குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# விபுலானந்தா சிறுவர் இல்லத்தில் மாணவர்கள் தங்குமிடக் கட்டடம்

## 73 லட்சத்து 39 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அக்கரைப்பற்று விபுலானந்தா சிறுவர் இல்லத்தில் 73 லட்சத்து 39 ஆயிரம் ரூபா ஒதுக்கீட்டில் நிர்மாணிக் கப்படவுள்ள மாணவர்கள் தங்கு மிடக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார துரித முயற்சி திட்டத்தின் கீழ் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிதியின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாம் கட்ட வேலைக்கான அடிக்கல் இவ்வாறு நடப்பட்டுடுள்ளது.

விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகர் இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் கஜேந்திரன் மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனின் இணைப்பு செயலாளர் க.கண்ணதாசன், மாவட்ட சிறுவர் நன்நடத்தை அதிகாரி எஸ்.சிவகுமார், அக்கரைப் பற்று பிரதேச சிறுவர் நன்நடத்தை அதிகாரி ஜெயதாஸ் உள்ளிட்ட இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அடிக்கல் நடும் பூஜை வழிபாடுகளை சிவஸ்ரீ சண்முகம் வசந்த குருக்கள் நடத்தி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.







# சர்வதேச கணித ஒலிம்பியாட்டுக்கு தெரிவான மாணவிக்கு கௌரவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கணித ஒலிம்பியாட் போட்டியில் வெற்றியீட்டி சர்வதேச போட்டிக்கு தெரிவான, மட்டக்களப்பு மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவி எம்.எச். அய்னிபதுல் பாடசாலை கல்வி சமூகத்தால் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ.ஜே.மர்சூக் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றமீஸ், ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கே.பி.எஸ். ஹமீட் உட்பட கல்வி அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# திருமலை மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கல்

( எச். எம். ஹலால்தீன்)

வறுமை கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு திருகோணாமலை மாவட்ட செயலகத்தில் இன்று (07) இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தின், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

இலங்கை சிறுவர் அபிவிருத்தி நிதியத்துக்கு ஜப்பான் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்ட சைக்கிள்கள் சிறுவர் நிதியத்தின் பங்காளர்கள் ஊடாக மூன்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. 200 சைக்கிள்கள் இவ்வாறு வழங்கப்பட்டன.



சிறுவர் நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அரியரட்ணம் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலக ஊழியர்கள், மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகள், திருகோணமலை மற்றும் திருகோணமலை வடக்கு கல்வி வலய அதிகாரிகள் அதிபர்கள் பெற்றோர்கள் உட்பட கலந்து கொண்டனர்.

# பரீட்சை நிலையங்களில் டெங்கு நுளம்பு பரிசோதனை

(எம்.ஏ.ஏ.அக்தார்)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களை டெங்கு நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிப் பரீட்சை நிலையங்களில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு பூச்சியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.



ஆய்வின் பிரகாரம் 85 வீதமான பாடசாலைகளின் சூழலில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் கண்டு பிடிக்கப்பட்டன. ஏனைய பாடசாலைகளில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்களும் அடையாளம் காணப்பட்டன.

பரீட்சை எழுதும் மாணவர்களை டெங்கு நோய் ஆபத்திலிருந்து பாதுகாப்பது பாடசாலைகளின் நிர்வாகத்தின் பொறுப்பும் கடமையுமாகும் என சிரேஷ்ட சுகாதார பூச்சியியல் உத்தியோஸ்தர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில், நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் அனைத்தும் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

பிளாஸ்டிக் நீர் தாங்கிகளின் மேலதிக நீர் வெளியேறும் குழாய்களின் துளைகளை மெல்லிய துணிகளால் கட்டிவிடுதல், கிணறுகளை நுளம்பு உட்செல்ல முடியாதவாறு வலையால் மூடிக் கட்டுதல், கூரைப் பீலிகளை மழை நீர் தேங்கி நிற்க முடியாதவாறு சீர் செய்தல் அல்லது அகற்றிவிடுதல், உடைந்த தளபாடங்களை மழை நீர் சேராத வண்ணம் பாதுகாப்பான இடங்களில் வைத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அனைத்துப் பாடசாலைகளது நிர்வாகத்தினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# சம்மாந்துறை பிரதேச அபிவிருத்திக்கு ஒரு கோடி 75 லட்சம் ரூபா ஒதுக்கீடு

## பைசால் காசிம் எம்.பி. வழங்கினார்

(கே. ஏ. ஹமீட் )

சம்மாந்துறை பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு கோடி 75 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பைசால் காசிமால் ஒதுக்கப்பட்ட நிதியைக் குறித்த அமைப்புகள் பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்கள் நேற்று (06) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந்த நிதியானது, சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள், முன்பள்ளி பாடசாலைகள், கிராமிய அபிவிருத்தி சங்கங்கள், மத ஸ்தலங்கள், மாதர் சங்கங்கள், மாற்றுத் திறனாளிகள் சங்கம் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியன நாடாளுமன்ற உறுப்பினரிடம் விடுத்த நீண்ட கால கோரிக்கைகளுக்கு அமைவாகவே வழங்கப்பட்டமை குறிப்பிட்டதக்கது.





# தேசிய மட்ட ஒலிம்பியாட்டுக்கு தெரிவான மாணவிக்கு உதவி



சம்மாந்துறை கல்வி வலயத்தில் இருந்து இந்த முறையும் தேசிய மட்ட ஒலிம்பியாட் கணிதப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய சாதனை மாணவி சிவரூபன் ஜினோதிகாவுக்கு ஊக்குவிப்பு உதவி வழங்கி வைக்கப்பட்டது.

லண்டன் கற்பகப்பிள்ளையார் ஆலய சபையின் இலங்கைக்கான இணைப்பாளரும் இலங்கை அகிலன் பவுண்டேசனின் உதவிப் பணிப்பாளருமான கலாநிதி வி.ஆர். மகேந்திரனிடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த ஊக்குவிப்பு உதவி நேற்று வழங்கப்பட்டது.

இந்தியாவின் ஸ்ரீமத் பரசமய கோளறி நாதர் ஆதீன 39 ஆவது குரு மகா சன்னிதான பீடத் தலைவர் புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் அதனை மாணவிக்கு வழங்கி வைத்தார்.

நிகழ்வில் அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன், சமூக செயற்பாட்டாளர்களான முன்னாள் தவிசாளர் கலாநிதிகிருஷ்ணபிள்ளைஜெயசிறில்,தா.பிரதீபன் ஆகியோரும் சுவாமிகளின் இந்திய பிரதிநிதிகளும் மாணவியின் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

தெரிவான மற்றுமொரு மாணவி மதுஸ்காவுக்கும் இந்த உதவி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிண்ணியா நகர திட்டமிடல் தொடர்பில் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிண்ணியா நகரத்தினுடைய வடிவமைப்பு, கிண்ணியா நகரத்தினுடைய ஒழுங்கமைப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

கிண்ணியா பாலம் தொடக்கம் உப்பாறு பாலம் வரையிலான மட்டக்களப்பு ஏ - 15 வீதியை அடிப்படையாகக் கொண்டு கிண்ணியா பிரதேசத்தின் உடைய நகர வடிவமைப்பை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு 'ரி' சந்தியிலிருந்து புகாரி சந்தி வரையிலான பகுதியும், புகாரி சந்தியிலிருந்து குட்டிக்கரசி பாலம் வரையிலான பகுதியும் நகர வடிவமைப்பு திட்டமிடலின் பிரதான பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன.

இந்தக் கலந்துரையாடல் கிண்ணியாபிரதேசத்துக்கானஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லா தலைமையில் அண்மையில் கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது கிண்ணியா பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம். எச்.எம் .கனி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், கிண்ணியா பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப், கிண்ணியா, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரிகள், கிண்ணியா வைத்தியசாலையின் பிரதி வைத்திய அத்தியட்சகர், கிண்ணியா நகர சபை மற்றும் கிண்ணியா பிரதேச சபைகளின் செயலாளர்கள், ஜம்மியத்துல் உலமா சபை, சூரா சபை, பள்ளிவாயல் சம்மேளனத்தின் தலைவர்கள் உட்பட சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.





# அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்

(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வேலைத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட காலத் தேவைக்கான இந்த வேலைத் திட்டத்தின் மூலம் மக்கள் நன்மை பெறவுள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் அமைச்சரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள சம்புநகர், மீலாத் நகர், ஆலம்குளம், தீகவாபி உள்ளிட்ட சில எல்லைப் புறக் கிராமங்களையும், அம்பாறை நகரையும் இணைக்கும் பாதையாகவும், விவசாயக் காணிகளுக்குச் செல்லும் மக்களின் பிரதான பாதையாகவும் உள்ள இவ்வீதி நீண்ட காலமாக இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் காணப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட வீதியால் அச்சமின்றிப் பயணிக்கக் கூடியதாக உள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர்எஸ்.எல்.எம்.ஹனீபா, கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ், உள்ளூராட்சி மன்றங்களின் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பு மாவட்ட கராத்தே போட்டிகள்!

(பழுவூரான்)

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்திலான கராத்தேப் போட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (05) மட்டக்களப்பு வெபர் உள்ளரங்கு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

மாவட்ட உதவி அரச அதிபர் எஸ். பிரணவன், மாகாண விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். ஈஸ்வரன், விளையாட்டுப் பிரதான போதனாசிரியர்கள் உட்பட கராத்தே நடுவர்கள், கராத்தே வீரர்கள் கலந்து கொண்டனர்.



இந்தக் கராத்தே போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து 50 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றினர்.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்படுபவர்கள் கிழக்கு மாகாண மட்ட கராத்தேப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர் என்று விளையாட்டுப் பிரதான போதனாசிரியர் தெரிவித்தார்.








# பிரதமர் நரேந்திர மோடி இன்று வாக்களித்தார்!

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி இன்று வாக்களித்தார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் கடந்த மாதம் 19 ஆம் திகதி மற்றும் 26 ஆம் திகதிகளில் இரண்டு கட்ட வாக்குப்பதிவு நிறைவுபெற்றது.

இதையடுத்து, உத்தரபிரதேசம், குஜராத், பீகார், அசாம், சத்தீஸ்கர், கோவை, மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட 10 மாநிலங்கள், 2 யூனிய பிரதேசங்களுக்கு உட்பட்ட 93 தொகுதிகளில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து பொது மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர்.

இந்நிலையில், அகமதாபாத்தில் காந்திநகர் தொகுதிக்கு உட்பட்ட வாக்கு சாவடியில் பிரதமர் நரேந்திர மோடி தனது வாக்கைச் செலுத்தினார். வாக்களிக்க வந்த பிரதமர் மோடியை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரவேற்றார். முன்னதாக, வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு, 'இன்றைய தேர்தலில் வாக்களிக்கும் அனைவரும் தங்களது வாக்குரிமையைஓ பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர்களின் தீவிர பங்கேற்பு நிச்சயமாக தேர்தலை விறுவிறுப்பாக மாற்றும்' என எக்ஸ் தள பக்கத்தில் பிரதமர் மோடி பதிவிட்டு இருந்தார்.

# ஸ்டாலினின் அரசுக்கு 3ஆம் ஆண்டு நிறைவு

சென்னை,மே 07

தமிழகத்தில் தமது மாநில அரசின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி கருணாநிதி நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

தமிழகத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. மே மாதம் 7 ஆம் திகதி (இன்றைய நாள்) முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்றுக்கொண்டார். அவருடன் புதிய அமைச்சரவையும் பொறுப்பு ஏற்றுக்கொண்டது.

அதன்பின்னர், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருந்த வாக்குறுதிகள் நிறைவேற்றும் பணி தொடங்கியது. அந்த வகையில், கடந்த 3 ஆண்டுகளில் 25க்கும் மேற்பட்ட முக்கியமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அதாவது, 1 கோடியே 15 லட்சம் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் நிறைவேற் றப்பட்டுள்ளது.



இந்த நிலையில், தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று இன்று (செவ்வாய்க்கிழமை) 4ஆம் ஆண்டு தொடங்குவதையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி நினைவிடங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அதன்பின்னர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்துக்கும், தலைமைச் செயலகத்துக்கும் செல்ல இருக்கிறார். அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர்கள், தி.மு.க. முக்கிய நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துத் தெரிவிக்க இருக்கின்றனர்.

# நேற்று இரவு ரபா நகர் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்!

ரபா நகருக்குள் நுழைந்து தாக்கப்போவதாக சபதம் செய்து வரும் இஸ்ரேல், தாக்குதலுக்கு முன்னதாக மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை தொடங்கியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் போர்நிறுத்தம் தொடர்பான எந்த உறுதியான முடிவும் எட்டப்படவில்லை. கடைசியாக கெய்ரோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையிலும் ஒப்பந்தம் இறுதி செய்யப்படவில்லை. அடுத்தகட்ட பேச்சுவார்த்தை இன்று நடைபெற உள்ளது.

எகிப்து மற்றும் கத்தார் நாடுகள் இணைந்து முன்மொழிந்துள்ள இந்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, ஒப்பந்தம் இன்று இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் ஒருபக்கம் நடந்து



கொண்டிருக்க, காசாவில் தனது கடைசி இலக்கான ரபா நகரை சுற்றி வளைத்துள்ள இஸ்ரேல் படைகள், அவ்வப்போது ரபா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. நேற்று இரவு ரபா மீது மீண்டும் வான்தாக்குதல் நடத்தப்பட்டது.

# வங்காளதேசத்தை வாட்டுகிறது வெயில் இரண்டு வாரங்களில் 15 பேர் உயிரிழப்பு

டாக்கா,மே07

வங்காளதேசத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மிகக் கடுமையான வெப்ப அலை வீசுகிறது. இதனால் பகல் நேரங்களில் பொதுமக்கள் பெரும்பாலானோர் வீடுகளிலேயே முடங்கி கிடக்கிறார்கள்.

இந்நிலையில், கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் கடுமையான வெப்பம் காரணமாக 15 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என்பதெள அரசு உறுதி செய்துள்ளது. பெரும்பாலான இறப்புகள் மகுரா மாவட்டத்தில் பதிவாகி




உள்ளன. இந்த மாவட்டத்தில் கடந்த வாரம் 43.8 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியிருந்தது.

உள்ளூர் நேரப்படி நேற்று காலை 11 மணி முதல் இன்று காலை 11 மணி வரையிலான 24 மணி நேரத்தில் 3 பேர் இறந்துள்ளனர் என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கோடை வெப்பத்தை சமாளிக்க, நாடு முழுவதும் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், மதரஸாக்கள் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களை கடந்த வாரம் அரசு மூடியது குறிப்பிடத்தக்கது.

புவி வெப்பமடைவதால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான வங்காளதேசத்தில், சீரற்ற மழை மற்றும் அதிக வெப்பநிலை காரணமாக வரும் ஆண்டுகளில் வெப்ப அலைகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

# சுனிதாவின் விண்வெளிப் பயணம் இன்று கடைசி நேரம் ஒத்திவைப்பு

வொஷிங்டன்,மே07

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (வயது 58). இவர் கடந்த 1998-ம் ஆண்டு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசாவில் இணைந்தார்.

இதனையடுத்து அங்கு விண்வெளிக்கு சென்று பல்வேறு ஆய்வுகளை அவர் மேற்கொண்டுள்ளார். அதன்படி இவரது முதல் பயணம் 2006 ஆம் ஆண்டிலும், 2ஆவது விண்வெளிப் பயணம் 2012ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக அமைந்தன. இதன் மூலம் மொத்தம் 322 நாள்கள் விண்வெளியில் தங்கி உள்ள அவர் அங்கு பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்.

தற்போது 3 ஆவது முறையாக மீண்டும் அவர் விண்வெளி பயணம் மேற்கொள்ள உள்ளார் என்று அறிவிக்கப்பட்டது. இவருடன் ஸ்டார்லைனர்



வில்லியம்ஸ் (58), பாரி புல்ச் வில்மோர் ஆகியோரும் செல்ல இருந்தனர்.

இந்தநிலையில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பாரி புல்ச் வில்மோர் ஆகியோர் பூமியில் இருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்லும் பயணம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது. கடைசி நேரத்தில் ஆக்சிஜன் குழாயில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு காரணமாக பயணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

ராக்கெட்டை புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரல் ஸ்பேஸ் போர்ஸ் ஸ்டேஷனில் உள்ள விண்வெளி ஏவுதளம் 41 இல் இருந்து இந்திய நேரப்படி இன்று (மே 7) காலை 8.04 மணிக்கு ஏவ நாசா திட்டமிட்டிருந்த நிலையில் சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி பயணம் ஒத்திவைக்கப்பட்டது.

கனடா முரசு
பக்கங்கள் 05
செவ்வாய்க்கிழமை 07/05/2024

## இரண்டு பெண்களுக்கு கத்திக் குத்தில் காயம்

ஒன்ராரியோ, மே 07

வார இறுதியில் ஓஷவாவில் வீடொன்றில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் இரண்டு பெண்கள் காயமடைந்தனர் என்று C2▶




# கனடிய நாடாளுமன்றில் இன்றையநாள் 'தமிழ் இனப்படுகொலை நினைவு தினம்'

ஒன்ராரியோ, மே 07

தமிழின படுகொலையை நினைவு கூறும் 'தமிழ் இனப்படுகொலை நினைவு தினம்' கனடிய நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறுகின்றது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 15 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் நாளாக இவ்வாண்டின் மே 18ஆம் C2▶

# வெளிநாட்டுத் தலையீட்டை எதிர்க்க வழி செய்கின்றது புதிய சட்ட மூலம்!

ஒன்ராரியோ, மே 7

வெளிநாட்டுத் தலையீட்டை எதிர்த்துப் போராடுவதற்காக புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமானது குற்றவியல் ஏற்பாடுகளை வலுப்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சட்டமானது கூருணர்வுமிக்க தகவல் மற்றும் வெளிநாட்டுச் செல்வாக்கு குறித்த வெளிப்படையான பதிவேட்டினை உருவாக்கவும் உதவும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

லிபரல் அரசாங்கத்தினால் மே 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

இது வெளிநாட்டு தலையீட்டுக்கு எதிராக அவற்றைக் கண்டறியவும், சீர்குலைக்கவும் மற்றும் பாதுகாக்கவும் அதிகாரிகளை சிறப்பாக தயார்ப்படுத்துவதாகக் கூறுகிறது.

இந்த சட்டமூலத்தை சமர்ப்பித்து கருத்து தெரிவித்த, 'கனடா ஒரு வலுவான, திறந்த மற்றும் சுதந்திரமான ஜனநாயகம்' என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் செய்தியாளர்களிடம் கூறினார்.




இந்த சட்டம், ஜனநாயக செயல்முறைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஏமாற்றும் அல்லது மறைமுகமான செயல்களை இலக்காகக் கொண்ட வெளிநாட்டு தலையீடுகளை குற்றங்களாக்கும்.



# மெக்கில் பல்கலைப் போராட்டக்காரர்கள் தம் கூடாரங்கள் தொடரும் என அறிவிப்பு

கியூபெக், மே 07

மொன்ரியலின் மெக்கில் பல்கலைக் கழகத்தில் முகாமிட்டுள்ள பலஸ்தீனிய ஆதரவு போராட்டக்காரர்கள் பல்கலைக் கழக நிர்வாகத்தின் உறுப்பினர்களைச் சந்தித்த பிறகு, தங்கள் கூடாரங்கள் மேலும் நீடித்திருக்கும் எனத் தெரிவித் துள்ளனர்.

முகாமின் செய்தித் தொடர்பாளர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தின் உறுப் பினர்களுடனான கூட்டத்திற்குப் பிறகு ஒரு செய்தி மாநாட்டை நடத்தினர்.

அவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றுவதற்கான தெளிவான காலக் கெடு அல்லது செயல்முறையை பல் கலைக்கழகம் வழங்கவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

‘பலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்கி ரமிப்பதில் உடந்தையாக இருப்பதாக’ தாங்கள் கூறும் நிறுவனங்களில் இருந்து பல்கலைக்கழகத்தை விலக் கிக்கொள்ளவும், இஸ்ரேலிய நிறுவ னங்களுடனான உறவுகளைத் துண் டிக்கவும் போராட்டக்காரர்கள் கோரு கின்றனர்.

அமெரிக்காவில் இதேபோன்ற வளாக எதிர்ப்பு அலைகளைத் தொடர்ந்து ஏப்ரல் 27 அன்று மெக்கில் பல்கலைக் கழக வளாகத்தில் பல்வேறு கூடாரங் களை போராட்டக்காரர்கள் அமைத்தனர்.

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுர்ரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அடிலெய்ட் அவென்யூ கிழக்கு மற்றும் டவுன்லைன் ரோடு வடக்கு பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்ற தகராறில் ஒரு பெண்ணை அவரது கணவர் கத்தியால் குத்தினார் எனக் கிடைத்த தகவலை அடுத்து அவர்கள் வீட்டிற்குத் தாம் அழைக்கப்பட்டனர் எனப் பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த நபரின் மகள் தலையிட முயன்ற போது, அவரும் கத்தியால் குத்தப்பட்டுள் ளார் என பொலிஸார் கூறியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தை பாதுகாப்பதற்காக அவர்களது பெயர்களை பொலிஸார் வெளியிடவில்லை.




## கனடிய நாடாளுமன்றில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி விளங்குகின்றது.

மே 18ஆம் திகதியை தமிழின படு கொலை தினமாக கனடிய நாடாளு மன்றத்தால் 2022ஆம் ஆண்டு அங் கீகரிக்கப்பட்டது.

இன்று நாடாளுமன்றத்தில் நடை பெறும் இந்த நினைவு நிகழ்வில் நாடா ளுமன்ற உறுப்பினர்கள், சமூகத் தலைவர்கள், தமிழ் சமூகத்தின் பிரதி நிதிகளுடன் இணைந்து இனப்படு கொலையில் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூருவார்கள் எனத் தமிழ் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மாலை 4:30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வு இரவு 6:30 மணி வரை நடைபெறவுள்ளதாக அந்த இணை யத்தளம் குறிப்பிட்டுள்ளது.

பூர்வீகக் குடிகள் நலன்பேண் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பின ருமான கெரி ஆனந்தசங்கரியினால் இந்த நினைவு நிகழ்வு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.



# போராட்டக்காரர்களின் உரிமைகளுக்காக மனித உரிமைகள் ஆணையாளரும் குரல்

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 07

முகாம்களில் அமைதியாக பங்கேற்கும் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவின் மனித உரிமைகள் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

காசாவுக்கு ஆதரவாகப் பேசுபவர்கள் தண்டிக்கப்படுவதைப் பற்றி தாம் கவலைப்படுகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கசாரி கொவென்டர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமைதியான மற்றும் சட்டபூர்வமான கூட்டம் மற்றும் சுதந்திரமான கருத்துக்களுக்கு போராட்டக்காரர்களுக்கு உரிமை உண்டு எனக் குறிப்பிட்டுள்ளார்.

யூத எதிர்ப்பு, பாலஸ்தீனிய எதிர்ப்பு, இனவெறி, இஸ்லாமிய வெறுப்பு அல்லது பொதுத் தூண்டுதல் மற்றும் அந்த வரம்புகளை மீறாத வரை, பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் போராட்டக்காரர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.பாலஸ்தீன ஆதரவு போராட்ட முகாம் கள் பல பிரிட்டிஷ் கொலம்பிய பல்கலைக் கழகம் மற்றும் விக்டோரியா பல்கலைக் கழகம் உட்பட்ட வளாகங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

# மருந்தகச் சட்டத்தை முடக்குவதை முழு மூச்சாகத் தடுக்க உறுதியளிப்பு

ஒன்ராரியோ, மே 07

நாடாளுமன்றத்தில் கன்சர்வேடிவ் கட்சியினர் தங்கள் மருந்தகச் சட்டத்தை முடக்குவதைத் தடுக்க லிபரல் கட்சியினரும், புதிய ஜனநாயகக் கட்சியினரும் முழு மூச்சாக உறுதியளித்துள்ளனர்.

புதிய ஜனநயாகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் மற்றும் சுகாதார அமைச்சர் மார்க் ஹாலண்ட் ஆகிய இருவரும் பெண்களின் சுதந்திரம் மற்றும் பிறப்பு கட்டுப்பாடு அணுகல் பற்றி உணர்ச்சிவசப்பட்ட நிலையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தனர்.


கனேடிய பெண்களுக்கு அந்த அணுகலை மறுக்க கன்சர்வேட்டிவ் கட்சியினர் முயற்சிப்பதாக அவர்கள் குற்றம் சாட்டினர்.



முன்கூட்டியே தேர்தலைத் தடுப்பதற்கான அரசியல் உடன்படிக்கையின் ஒரு பகுதியாக அவர்களது கட்சிகள் இந்த சட்டமூலத்தை கவனமாகப் பேச்சுவார்த்தை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்தடை மற்றும் நீரிழிவு மருந்துகள் மற்றும் பொருள்களை உள்ளடக்கும் திட்டத்தை ஒன்றாகத் திட்டமிட்டன.

கன்சர்வேடிவ் சுகாதார விமர்சகர் ஸ்டீபன் எல்லிஸ் கடந்த மாதம் சட்டமூலத்தில் ஒரு திருத்தத்தை தாக்கல் செய்தார்,

இது நாடாளுமன்றத்தால் அங்கீகரிக் கப்பட்டால், முன்மொழியப்பட்ட சட்டத்தை திறம்பட இரத்து செய்யும்.



# கனடியத் தமிழர் பேரவை குறித்துக் கண்டனம் டொரன்டோவில் நேற்றைய மக்கள் சந்திப்பில்

ஒன்ராறியோ, மே 07

கனடியத் தமிழர் பேரவைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்று மே 6ஆம் திகதி டொரன்டோவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், பூர்வீகக் குடிகள் நலன் பேண் அமைச்சருமான கெரி ஆனந்த சங்கரி கலந்துகொள்ளாத போதிலும், அவரது அறிக்கை நிகழ்வின் ஆரம்பத்தில் வாசிக்கப்பட்டது.

### கெரி ஆனந்தசங்கரி

அவரது அறிக்கையில், 'முள்ளிவாய்க்காலின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல், தப்பிப் பிழைத்தோர் மீது கவனம் செலுத்தும் வகையிலும், ஏற்பட்ட மனச்சித்திரவதையைப் புரிந்தும், 2022ஆம் ஆண்டு மே 18ஆந் திகதி கனேடிய நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதைப் போன்று இலங்கையில் தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலையை அங்கீகரிக்கும் வகையிலும் அமைந்திருக்கவேண்டும். இவ்வாறு அமையாத எந்த நினைவேந்தலும் தப்பிப்பிழைத்தோருக்கு மேலதிக மனச்சித்திரவதையையே ஏற்படுத்தும். இலங்கை அரசிலும், படைகளிலும் உள்ள – போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்கள் – பொறுப்புக்கூறுவதற்கான வழிகள் இந்த நினைவேந்தல்களில் கலந்துரையாடப்படவேண்டும் அல்லது முன்வைக்கப்படவேண்டும். தமிழ்க் கனேடியர்களை ஒற்றுமைப்படுத்தும் அனைத்து முயற்சிகளும் நினைவேந்தல்களில் எடுக்கப்படவேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

'இந்த உணர்வுடன், முள்ளிவாய்க்காலின் 15ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு 2024ஆம் ஆண்டு மே 7ஆந் திகதி மாலை 4:30 முதல் 6:30 வரை ஒட்டாவா நாடாளுமன்ற வளாகத்தில் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாள் நிகழ்வொன்றை நான் ஏற்பாடு செய்துள்ளேன். இந்த நிகழ்வில் மேலதிக கருத்துகளை நான் வெளியிடுவேன்' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### பார்த்தி கந்தேவல்

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த டொரன்டோ நகர சபை உறுப்பினர் பார்த்தி கந்தேவல், கனடியத் தமிழர் பேரவை தொடர்பிலான பிரச்சினை ஆறு மாதங்களுக்கானது அல்ல எனவும், 15 வருடங்களாக அவர்கள் குறிக்கோளுக்கு இணங்காமல் செயற்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

கனடியத் தமிழர் பேரவை என்பது சமூகத்திற்காக அமைப்பு எனவும், தனியான ஒரு குழுவின் விருப்பத்திற்கு இணங்கிச் செயற்படும் அமைப்பல்ல எனவும், அந்த அமைப்பில் மறுசீரமைப்பு ஏற்பட வேண்டியது அவசியம் எனவும் பார்த்தி கந்தேவேல் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பீல் பிராந்திய பொலிஸ் பிரதான நிஷான் துரையப்பா இலங்கைக்கு விஜயம் செய்து, இலங்கையின் பொலிஸ் பிரதானியை சந்தித்தமையையும் அவர் விமர்சித்தார்.

### நீதன் சான்

டொரன்டோ மாவட்ட பாடசாலை சபையின் அறங்காவலரான நீதன் சான் கருத்து தெரிவித்த போது, பல்வேறு மட்டங்களில் கடந்த 15 வருட முயற்சியின் பின்னர் தேசிய மட்டத்தில் இனப்படுகொலை தினத்தை பிரகடனம் செய்துள்ள நிலையில், கனடியத் தமிழர் பேரவை அதனை மறுத்து நிகழ்வொன்றை ஒழுங்கு செய்வது சோகத்தையும், கோபத்தையும் ஏற்படுவதாக தெரிவித்தார்.

தமிழின அழிப்பு என்பதனை பயன்படுத்த மறுப்பவர்கள் ஒரு சிலர் மாத்திரமே, பலர் அதனை அங்கீகரிக்கின்றாரகள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### அனு ஸ்ரீஸ்கந்தராஜா

தமிழ் சமூகத்திற்குள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்கிற கோரிக்கை இருந்து வருகின்ற போதிலும், விமர்சனங்களுக்கான வெளி வழங்கப்படாவிட்டால் அது சாத்தியமற்ற என டொரன்டோ மாவட்ட பாடசாலை சபையின் அறங்காவலரான அனு ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

இந்த நிகழ்வு என்பது எமது பிள்ளைகளுக்கு எமது வரலாற்றை கொண்டு சேர்க்கும் முக்கிய நிகழ்வு என்பதால், அதனை சரியாக கடத்தவேண்டியது எமது பொறுப்பு என அவர் மேலும் குறிப்பிட்டார்.

### யாழினி இராஜகுலசிங்கம்

2009ஆம் ஆண்டில் போரின் இறுதிக்கட்டத்தில் கனடிய அரசாங்கத்திடமிருந்து பல்வேறு எதிர்ப்புகள் இருந்தாலும், தமது அடையாளத்தை பேணுவதற்கும் பெரும் தடைகள் இருந்தாலும் பல்வேறு மட்ட போராட்டங்களின் பின்னரே தமிழின அழிப்பு என்பது அங்கீகரிக்கப்பட்டதாக டொரன்டோ மாவட்ட பாடசாலை சபையின் அறங்காவலரான யாழினி இராஜகுலசிங்கம் தெரிவித்தார்.இந்த நிகழ்வில் அருட்தந்தை சந்திரகாந்தன் அவர்களும், தப்பிப் பிழைத்தவர்கள் சார்பில் பிரணவன் தங்கவேல் ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

# கனடாவில் யூத விரோதக் கருத்துக்கள் அதிகரித்துள்ளன என ஆய்வில் தகவல்




ஒன்ராறியோ, மே 07

கடந்த ஆண்டு இஸ்ரேல் மற்றும் காசாவில் நடந்த போர், கனடாவில் யூதர்களை குறிவைப்பதை 'நியாயப் படுத்த' பயன்படுத்தப்பட்டதால், கனடாவில் யூத விரோதக் கருத்துக்கள் அதிகரித்துள்ளதாக அண்மைய ஆய் வொன்று வெளிப்படுத்தியுள்ளது.

ஒட்டாவாவில் உள்ள தேசிய படுகொலை நினை வுச்சின்னத்தில் நடந்த விழாவில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொலியேவ் ஆகியோர் உரையாற்றினர்.

கடந்த வருடம் ஒக்டோபர் 7ஆம் திகதி முதல், பல தலைமுறைகளாக நாங்கள் காணாத அளவுக்கு யூத எதிர்ப்புத் தன்மையில் குழப்பமான அதிகரிப்பு ஏற்பட்டுள் ளதாக பிரதமர் ட்ரூடோ இதன்போது தெரிவித்துள்ளார்.

புகாரளிக்கப்பட்ட சம்பவங்களின் அடிப்படையில், பொலிஸாரின் ஒத்துழைப்பு உட்பட, 2023 இல் யூதர்களை இலக்காகக் கொண்ட 5,791 ஆவணப்படுத்தப்பட்ட வன்முறை, துன்புறுத்தல் மற்றும் அழிவுச் செயல்கள் பதிவாகியுள்ளன.

# பல்கலைக்கழங்களை விட்டு வெளியேற போராட்டக்காரர்களுக்கு வலியுறுத்தல்!

## ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்ட் கோரிக்கை

ஒன்ராறியோ, மே 07

பலஸ்தீன ஆதரவுப் போராட்ட முகாம் களை பல்கலைக்கழக வளாகங்களை விட்டு வெளியேறுமாறு ஒன்ராறியோ வின் முதல்வர் டக் ஃபோர்ட் அழைப்பு விடுத்துள்ளார்.

சமீப வாரங்களில் பல வளாகங்களில் உருவாகியுள்ள முகாம்கள் சாதகமான செய்தியைத் தரவில்லை என்று அவர் கூறியுள்ளார். போராட்டத்தில் ஈடுபட்டுள் ளவர்களால் தங்கள் குழந்தைகள் துன்புறுத்தப்படு வார்கள் என்ற கவ லையை வெளிப்படுத் தும் பெற்றோரி டமிருந்து செய்திகளைத் தாம் பெறுகி றார் என அவர் தெரிவித்துள்ளார்.



'அவர்கள் நகர வேண்டும். பல்க லைக்கழகம் இவர்களை நகர்த்த வேண்டும்' என்று முதல்வர் ஃபோர்ட் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் செய்தியா ளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டங்கள் பற்றி தான் பார்த்த மற்றும் கேள்விப்பட்ட சில விடயங்கள் 'ஏற்றுக்கொள்ள முடியாதவை' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கெஃபியேவை அணிந்தமைக்காக சபையில் இருந்து வெளியேற்றம்!

## திரும்பவும் ஒன்ராரியோ மாகாண சபையில் சர்ச்சை

ஒன்ராறியோ, மே 07

கெஃபியேவை அணிந்தமைக்காக மீண்டுமொரு முறை ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர் ஒருவர் வெளி யேறுமாறு பணிக்கப்பட்ட சம்பவம் மே 6ஆம் திகதி திங்கட் கிழமை பதிவாகியுள்ளது.

பலஸ்தீனத்திற்கு சகோதரத்துவத்தை வெளிப்படுத்தும் ஆடையாக கருதப்படும் கருப்பு மற்றும் வெள்ளை நிற சால்வையை அணிந்தமைக்காக சபை முதல்வர் டெட் ஆர்னோட்டினால் உறுப்பினர் சாரா ஜமா வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

சுரா ஜமாவுடன் இணைந்து புதிய ஜனநாயகக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களான ஜொயல் ஹார்டன் மற்றும் கிறிஸ்டின் வொங்-டேம் ஆகியோரும் சபையை



விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த மாதமும், கெஃபியே அணிந்திருந்தமைக்காக சாரா ஜமாவை சபையை விட்டு வெளியேறுமாறு சபை முதல்வர் பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.